ஏற்போர் ‘ ஆம் ’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘ இல்லை ’ என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

‘1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்யஅனுமதி அளிக்க வேண்டும்’ எனக் கோருகிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் “ ஆம் ” என்க. (ஆம்)

மறுப்போர் “இல்லை” என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.